**அபிவிருத்தி லொத்தர் சபையிம் - 2020**

-----------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

----------------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

-----------------------------------------------------------------------------------------------------------------------

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல்

நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான "சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட" உள்ளகக் கணக்கீட்டு முறைமையொன்று சங்கத்தினால் பேணப்படல் அவசியமானது ஆகும். பொதுப் பேரேடு, நாளேடுகள், நாளேட்டுக் குறிப்புகள், பொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் போன்ற பிரதான கணக்கீட்டுக் குறிப்புகளை பேணுவதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள் பின்வரும் தலைப்புகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பௌதீக ரீதியாக சபையிடம் காணப்படாத ரூபா 8,095,000 பெறுமதியான கெப் வண்டியொன்றின் கிரயம் நிலையான சொத்தாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சபையிடம் காணப்படாத போதிலும், ரூபா 8,095,000 பெறுமதியான கெப் வண்டி கொள்வனவு செய்யப்பட்டு சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கான பணம் "United Motors" நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளமையால், அதனை நிறுவனத்தின் சொத்தொன்றாக கருதி நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த வண்டிக்கு செலுத்தப்பட்ட கியரம் வண்டியை கொண்டு சென்ற தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு உரிய சட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. | பௌதீக ரீதியாக சொத்து காணப்படாத காரணத்தால் வண்டியை கொண்டு சென்ற தரப்பினரிடமிருந்து ரூபா 8,095,000 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) | சபைக்கு உரித்தற்ற காணியொன்றில் மேற்கொள்ளப்பட்ட | இந்த காணிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமான ரூபா | பதிவழிப்பதற்கு உரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாண பணியொன்றுக்காக செலவிடப்பட்ட ரூபா 492,392 ஆன தொகை காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த தொகை திஸ்ஸமாராம பிரதேச செயலகத்திடமிருந்து பெற வேண்டிய தொகையொன்றாக அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி அந்த அளவினால் கூட்டிக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நடைமுறைச் சொத்துக்கள் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 492,392 தொகையை அறவிடுவதற்கு முயற்சி செய்த போதிலும், திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளரினால் அரச காணியொன்றினை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை மீள அறவிடும் இயலுமை இல்லாதிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்த தொகையை பதிவழிப்பதற்காக 2021ஆம் ஆண்டு மார்ச் 02 ஆந் திகதி இடம்பெற்ற 248ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்க பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்படுவதுடன், அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் 2021ஆம் ஆண்டின் இறுதியில் கணக்குகளை தயாரிக்கும் பொது ரூபா 492,392 தொகையை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுத்தல். |
| (இ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்பு இலக்கம் 11 இன் பிரகாரம், மோட்டார் வாகன பெறுமானத்தேய்வு ஒதுக்கக் கணக்கின் ஆரம்ப மீதியான ரூபா 46,792,272 ஆன போதிலும், கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்ட விரிவான பட்டோலைக்கமைய அது ரூபா 48,480,633 ஆனமையால் ரூபா 1,688,361 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2020 சனவரி 01ஆந் திகதி நிலவிய இந்த வேறுபாடு தொடர்பில் இணங்குவதுடன், 2020ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மீள்மதிப்பீட்டின் போது இந்த தவறு சீராக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளபடியான மீதி சரியானது என உறுதிப்படுத்த முடியும். | வேறுபாட்டுக்கான காரணங்கள் கண்டறியப்பட்டு திருத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதற்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | இறக்குமதி செய்யப்பட்ட வாகனம் ஒன்றுக்குரிய தனியர் முகவர் நிறுவனமொன்றுக்கு செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 1,266,631 ஆன தொகை தொடர்பில் நீதிமன்ற வழக்கு நடவடிக்கையொன்ற மீளாய்வாண்டின் போது நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்கான பொறுப்பு நடைமுறைப் பொறுப்புகளிலிருந்து அகற்றப்படாது தொடர்ந்தும் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | PB-6024 ஆம் இலக்கமுடைய கெப் வண்டிக்குரியதாக யுனைட்டட் மோட்டர்ஸ் நிறுவனத்திற்கு செலுத் வேண்டியதாக காணப்பட்ட ரூபா 8,095,000 ஆன தொகைக்கான வட்டியாாக 10 வருடங்களுக்கு 10 சதவீதம் எனும் படியாக ரூபா 8,095,000 மேலதிக தொகையொன்று 2018ஆம் ஆண்டின் இறுதியில் மதிப்பீடு செய்யப்பட்டது. எவ்வாறான போதிலும், இதற்கான வட்டியாக ரூபா 6,828,369 தொகை மாத்திரம் செலுத்த நேர்ந்துள்ளதாக கட்டுப்பாட்டு பிரிவினால் 2021 மார்ச் 10ஆந் திகதி கணக்குகள் பிரிவிற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், 2021 மார்ச் மாதத்தில் இந்த சட்டக் கட்டணங்கள் மிகை ஒதுக்கீட்டுக்காக உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு உரிய முறையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | 2021ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (உ) | 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் பிரகாரம், அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 1,246,717 ஆன போதிலும், கணக்காய்விற்காக வழங்கப்பட்ட பட்டோலையில் அந்த மீதி ரூபா 1,096,717 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 150,000 ஆன | இணங்குகின்றேன். Employee Contribution ஆக பதிவு செய்யப்பட வேண்டிய ரூபா 150,000 தொகை Staff Loan Recovery Covid 19 ஆக பதிவு செய்யப்பட்டமை, நடப்பாண்டின் கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், பட்டோலை இலக்கம் 1 இற்கு உரிய இறுதி | 2021ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | மீதியில் எதுவித வேறுபாடும் நிகழ்ந்திருக்கவில்லை. | |
| (ஊ) | 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான 03 வங்கிக் கணக்குகளில் நிலவிய ரூபா 2,535,678 பெறுமதியான இனங்காணப்படாத காசோலைகள் மற்றும் வைப்புக்களை இனங்கண்டு கணக்குகளில் உரிய சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விநியோக சந்தைப்படுத்தல் முகவர்கள் மற்றும் விற்பனை முகவர்களினால் சபைக்கு லொத்தர் சீட்டு விற்பனைக்காக மற்றும் ஏனைய விசேட கொடுப்பனவுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட காசு வைப்புக்களை உரிய முறையில் இனங்காணல் இடம்பெறாமையால் இந்த பிரச்சினை உருவாகியுள்ளது. அவற்றுள் 6 மாதங்களை கடடந்த இனங்காணப்படாத வைப்புக்கள்சபையின் ஏனைய வருமானமாக கணக்கு வைப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 3 கணக்குகளில் காணப்படும் இனங்காணப்படாத வைப்புக்களை உரிய முறையில் இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (எ) | 2020 சனவரி 01ஆந் திகதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்த் வரிக் கணக்கின் மீதி ரூபா 36,259,336 ஆன போதிலும், 2019 திசெம்பர் மாதத்திற்குரிய ஒதுக்கங்கள் ரூபா 35,900,655 ஆகம். ஆரம்ப மீதியில் காணப்பட்ட அந்த ரூபா 358,681 ஆன வேறுபாடு இனங்காணப்பட்டு தெளிவுபடுத்தப்பட்டிராததுடன், மீளாய்வாண்டின் இறுதியிலும் அந்த வேறுபாடு அவ்வாறே காணப்பட்டது. | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | 2021ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | தொடர்புடைய அறிக்கைகளுக்கமை பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | **ரூபா** | **ரூபா** | ரூபா | | |
| (அ) | வெகுமதி பொருள் இருப்பு | 12,132,050 | 10,587,138 | 1,544,912 | இணங்குகின்றேன். கணக்குகள் பிரிவு மற்றும் களஞ்சியத்தில் உள்ள வெகுமதிகள் மற்றும் அவகுமதி பொருள் இருப்பு பதிவேட்டின் உருப்படிகள் பொருண்மையாக திருத்தப்படுவதுடன், அவற்றின் பெறுமதிகளில் விலகலொன்ற நிலவுகின்றது. நிதிக்கூற்றுக்ளில் இருப்பு உருப்படிகள் கணிப்பிடப்படுவது FIFO கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் ஆகும். | அவதானிப்புகளுடன் இணங்குவதால் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) | லொத்தர் சீட்டு அச்சீட்டு செலவினம் | 451,308,013 | 448,978,201 | 2,329,812 | பெறுகைகள் பிரிவினால் கணக்காய்வின் கோரிக்கைகமைய 2020ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட உடனடி லொத்தர் சீட்டுக்கள் தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், நிதிக்கூற்றுக்களில் 2020ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட உடனடி லொத்தர் சீட்டுக்கள் கிரயத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 2020ஆம் ஆண்டுக்கான லொத்தர் அச்சீட்டுக் கிரயத்தினுள் கடந்த வருடத்தின் | 2021ஆம் ஆண்டின் போது வேறுபாட்டினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்களின் இருப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளமையால் அந்த அச்சீட்டுக் கிரயம் பெறுகைகள் பிரிவினால் வழங்கப்பட்டுள்ள 2020ஆம் ஆண்டின் அச்சீட்டு கிரயத்தை விட மிக உயரிய பெறுமதியை கொண்டுள்ளது.

பெறுகைகள் குழுவினால் வழங்கப்பட்டுள்ள அறிக்கையில் சசிரி லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டுக் கிரயம் ரூபா 00.46 ஆக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அது 00.49 ஆக திருத்தப்பட வேண்டியதுடன், அந்த அறிக்கையில் Sweep App ஊடாக விற்பனை செய்யப்படும் லொத்தர் சீட்டுகளுக்கு உரிய கிரயம் உள்ளடக்கப்படவில்லை.

இந்த விடயங்களின் அடிப்படையில் கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட வேறுபாடு நிகழ்ந்துள்ளது.

அதன் பிராகரம் நிதிப் பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அறிக்கை சரியானது என்பதுடன், எதிர்காலத்தில் அட்டுறு அடிப்படையில் கணக்குகள் பிரிவின் ஊடாக அறிக்கையை அடிப்படையாக கொள்வதாக கேட்டுக்கொள்கின்றோம்.

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் வொக்செல் வீதியில் இலக்கம் 234 இல் அமைந்துள்ள கட்டிடத்தினை 2006 ஒக்தோபர் முதல் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கை ஒரு தரப்பினரால் மீறப்பட்ட காரணத்தால் வைப்புத் தொகையாக செலுத்திய ரூபா 723,780 மற்றும் ஆண்டிற்காக செலுத்திய வாடகைப் பணத்தின் ஒரு பகுதியான ரூபா 4,976,220 ஆகிய தொகைகளின் கூட்டுத் தொகையான ரூபா 5,700,000 இற்றைக்கு 15 வருடங்களாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | வொக்செல் வீதியில் இலக்கம் 234 இல் அமைந்துள்ள கட்டிடத்தினை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக நிறுவனத்திற்கு மீள அறவிடப்பட வேண்டிய ரூபா 5,700,000 ஆன தொகையை மீள அறவீடு செய்தல் தொடர்பில் அல்லது பதிவழித்தல் தொடர்பில் பரிந்துரையொன்றினை வழங்குமாறு நிதி அமைச்சின் செயலாளரால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த குழு 04 சந்தர்ப்பங்களில் கூடி இது தொடர்பில் கலந்துரையாடி இறுதி அறிக்கையை நிதி அமைச்சின் செயலாளருக்கு தற்போது சமர்ப்பித்துள்ளது. அதன் பிரகாரம் நிதி அமைச்சின் செயலாளரால் எதிர்காலத்தில் வழங்கப்படும் அறிவுரைக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய பணத்தை அறவிடுதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) | 1990 ஆம் ஆண்டின் வோட் பிரதேசத்தின் நபர் ஒருவருடன் ஏற்படுத்தப்பட்டிருந்த வாடகை உடன்படிக்கையின் பிரகாரம், ரூபா 2,520,000 ஆன கட்டிட வாடகை வைப்புத் தொகையொன்றினை அறவிட்டுத் தருமாறு கோரி 23 வருடங்களுக்கு முன்னர் | 1990 ஆம் ஆண்டின் வோட் பிரதேசத்தின் நபர் ஒருவருடன் ஏற்படுத்தப்பட்டிருந்த வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 2,520,000 தொகையை அறவிடுவதற்கு உரிய சட்ட நடவடிக்கைகள் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், வழக்கு தொடுக்கப்பட்ட | குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | தொடுக்கப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பு 2016 சனவரி 11ஆந் திகதி கிடைத்திருந்ததுடன், அதன் போது குறித்த தொகையை அறவிடுவதற்கு தீர்மானித்திருந்த போதிலும், தீர்ப்பு வழங்கப்பட்டு 05 வருட காலம் கடந்துள்ள போதிலும், குறித்த ொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட நீதிமன்றத்தினால் வழுங்கின் முன்னேற்றம் தொடர்பில் எமக்கு அறிவிப்பதாக கூறியுள்ளது. அதன் படி நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 2013ஆம் ஆண்டின் போது 3 சந்தர்ப்பங்களில் ரூபா 2,877,144 மற்றும் 2014ஆம் ஆண்டின் போது ரூபா 749,583 ஆக ரூபா 3,626,727 ஆன கூட்டுத்தொகை Archtype நிறுவனத்திற்கு மதியுரைக் கட்டண முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. சுமார் 7-8 வருடங்களாக வெளித் தரப்பினரிடம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 2014ஆம் ஆண்டின் போது Archtype நிறுவனத்திற்கு கட்டிடங்களை புதுப்பிப்பதற்கு தேவையான திட்டங்களை தயாரித்தல் மற்றும் வீடமைப்பு ஆகியவற்றுக்காக ரூபா 3,626,727 முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும் இந்த புதுப்பித்தல் பணிகள் பின்னர் மேந்கொள்ளாதிருக்க தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக இலஞ்ச மற்றும் மோசடிகள் ஆணைக்குழுவினால் எமது கோவைகளின் மூலப் பிரதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அந்த விசாரணையின் பின்னர் இலஞ்ச மற்றும் மோசடிகள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கமைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். | உரிய நிறுவனத்திடமிருந்து பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஈ) | விநியோக கடன் பட்டோராக நிதி நிலைமைக்கூற்றில் ரூபா 8,296,082 ஆன தொகை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டினுள் அந்த மீதியில் எதுவித | கணக்காய்வு ஐயவினாவின் பிரகாரம் விநியோக கடன் பட்டோர் கடன் மீதியாக குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 6,555,851 ஆன மீதி ஒரு வருடம் பழமையான கடன் மீதி அல்ல என்பதுடன், செயற்படு வருடத்தில் | பெற வேண்டிய பழமையான கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த மீதியினுள் ஒரு வருடம் பழமையான கடன் மீதிகள் ரூபா 6,555,851 தொகையும், 2 வருடம் பழமையான கடன் மீதிகள் ரூபா 1,496,695 தொகையும், 2 வருடங்களை விஞ்சிய கடன் மீதியான ரூபா 270,536 தொகையும் உள்ளடங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

லொத்தர் சீட்டுக்களை கொள்வனவு செய்வது தொடர்பில் உருவாகிய மீதியாகும்.

வங்கிப் பிணைமுறிகளின் ஊடாக வெளிப்படுத்தப்படும் இந்த கடன் மீதிகளிடையே ஆர்.ஜே.எல். குணசேன எனும் விநியோக முகவரின் மீதியான ரூபா 1,342,756.48 தொகை தவரித்து அனைத்து கடன் மீதிகளும் சபையினால் தற்போது அறவிடப்பட்டுள்ளதுடன், மேற்குறிப்பிடப்பட்ட விநியோக முகவரின் மீதியையும் அறவிடுவதற்காக சபையினால் வங்கிப் பிணைமுறியை இரத்துச்செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு உரிய சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவ்வாறே, கணக்காய்வு ஐயவினாவில் இரண்டு வருடங்களுக்கு பழமையான கடன் மீதிகளாக காண்பிக்கப்பட்டுள்ள கடன் மீதிகளை நிதி நிலைமைக் கூற்று தயாரிக்கப்பட்ட ஆண்டுக்கு முன்னை ஆண்டு முதலாக முன்கொண்டுவரப்படும் மீதியாக காணப்படுகின்றமை வங்கிப் பிணைமுறிகள்ன ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது. இந்த நிலுவைப் பணத்தில் குணசேன ரத்னகோன் எனும் விநியோக முகவரின் மீதி மாத்திரம் அறவிடப்பட வேண்டியதாக உள்ளதுடன், ஏனைய கடன் மீதிகள் சபையினால் தற்போது அறவிடப்பட்டுள்ளது. மேலும்,

மேற்குறிப்பிடப்பட்ட விநியோக முகவரின் மீதியையும் அறவிடுவதற்காக சபையினால் வங்கிப் பிணைமுறியை இரத்துச்செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு உரிய சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அவ்வாறே, 2 வருடங்களை விட பழமையான கடன் மீதியான ரூபா 270,536 ஆன தொகை மூன்று விநியோக முகவர்களின் கடன் மீதிகளாவதுடன், அவற்றில் ரூபா 263,607.05 ஆன கடன் மீதிக்குரிய ஏ.எம். வீரகோன் விநியோக முகவரின் கடன் மீதியை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.
அவ்வாறே, விநியோக முகவர் பீ.டீ.ஜே. பெரேரா அவர்களிடமிருந்து சபைக்க அறவிடப்பட வேண்டிய ரூபா 825 ஆன தொகையை உடனடியாக செலுத்துமாறு அவருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், விநியோக முகவர் ஜே.டபிள்யூ. சந்தன ஜயலால் அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 6,104.15 ஆன தொகையை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.
எதிர்காலத்தில் குறித்த கடன் தொகைகள் கிடைக்காதுவிடின் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து ஐயக்கடனாக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 1.6.2 முற்பணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014ஆம் ஆண்டின் போது, 2015ஆம் ஆண்டின் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சிக்காக தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக ஒரு நிறுவனம் மற்றும் மூன்று தனிநபர்களுக்கு ரூபா 202,800 ஆன முற்பணத் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன், சுமார் 7 வருட காலமாக அவை தீர்ப்பனவு செய்யப்படாது கணக்குகளில் முற்பணமாக காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2015ஆம் ஆண்டின் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சிக்காக தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக ஒரு நிறுவனம் மற்றும் மூன்று தனிநபர்களுக்கு ரூபா 202,800 ஆன முற்பணத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. அந்த பணத்தை அறவிடுவதற்காக அவர்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுத்துமூலம் அறிவித்த போதிலும், இதுவரையிலும் கிடைத்திருக்கவில்லை. இந்த தொகையை மீள அறவிடுவதற்கு முயற்சி எடுக்கப்படுவதுடன், அவ்வாறல்லாத போது பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணத் தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச்சட்டத்தின் 17(5) ஆம் பிரிவு | வெற்றியாளர்களால் உரித்து கோரப்படாத, 06 மாதங்களை கடந்த வெகுமதிகளை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தை முதலாவதாக நிதியத்திற்கும் பின்னர் சனாதிபதி நிதியத்திற்கும் | ஏதேனும் விளம்பர பணியொன்றுக்காக மேலதிக வெகுமதி ஒதுக்கக் கணக்கினை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்படுவதுடன், 06 மாதங்களை கடந்த பின்னர் உரித்து | அதிகாரச்சட்டத்தின் பிரிவுகளுக்கமைய செயற்படல். |

| | | | |
|---|---|---|---|
| | செலவு வைக்க வேண்டிய போதிலும், 2020 பெப்ரவரி 12ஆந் திகதியில் உள்ளபடியாக 06 மாதங்களை கடந்த ரூபா 1,428,172 கிரயமான 11 வெகுமதி உருப்படிகளுக்குரிய 162 வெனுமதிகளை விற்பனை செய்தமையால் கிடைக்கும் பணத்தை சனாதிபதி நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கோரப்படாத போது அதனை எதிர்கால விளம்பர நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியும் என சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த உருப்படிகளை விற்பனை செய்யாது எதிர்கால விளம்பர நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| i. VIII அத்தியாயத்தின் 10.1 ஆம் பந்தி | பொதுவான கடமைகளை நிறைவேற்றும் போது கூடுதலாக பயணங்களை மேற்கொள்ள நேரிடும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் பயணக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நிறுவனத்தின் தலைவருக்கு இயலுமை உள்ள போதிலும், அவ்வாறல்லாது 9 வலய முகாமையாளர்களுக்கு 07 மாத காலப்பகுதிக்காக எரிபொருள் மற்றும் ஏனைய படிகளாக ரூபா 2,835,356 ஆன தொகை சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. | வலய முகாமையாளர்கள் தமது கடமைகளுக்காக பிரயாணம் மேற்கொள்ளும் போது அவர்களுக்கு உரித்துடைய வாகனங்களை பயன்படுத்துவதற்காக வாகனம் மற்றும் எரிபொருளுக்காக 1 கி.மீ. இற்கு ரூபா 40 படியான கொடுப்பனவொன்று பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் செலுத்தப்படுகின்றது. அவ்வாறே களக் கடமைகளுக்கு அறிக்கையிடும் போது, இரவு தங்கும் போது, தங்கும் படியொன்று நிதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள துடன், அந்த கொடுப்பனவும் மேற்படி 1 கி.மீ. இற்கு ரூபா 40 | தாபனவிதிக் கோவையின் பிரகாரம் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | படியான கொடுப்பனவொன்றும் எனும் கூட்டுத்தொகை கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த பெறுமதி ஆகும். | |
| ii. | XIV அத்தியாயத்தின் 8ஆம் பந்தி | அரச நிறுவனங்களில் களக் கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் கடமைகளை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தும் வாகனத்திற்காக ஒரு கி.மீ. இற்கு ரூபா 12 படியான தொகை மாத்திரம் செலுத்த முடியுமான போதிலும், 1 கி.மீ. இற்கு சபையினால் விற்பனை முகாமைாயாளர்களுக்கு ரூபா 40 படியாக செலுத்தப்பட்டிருந்தது. | வலய முகாமையாளர்கள் தமது கடமைகளுக்காக அவர்களுக்கு உரித்துடைய வாகனங்களை பயன்படுத்துவதற்காக 1 கி.மீ. இற்கு ரூபா 40 படியான கொடுப்பனவொன்று செலுத்தப்படுவதுடன், வாகனங்கள் மற்றும் பராமரிப்பு மற்றும் ஏனைய செலவினங்கள் வலய முகாமையாளர்களால் மேற்கொள்ளப்பட வேண்டியமையால் அதனைக் கருத்திற்கொண்டு மேற்படி வீதம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், வானகமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டால், அந்த வாகனத்திற்கு 1 கி.மீ. இற்கு ரூபா 40 படியான கொடுப்பனவொன்று செலுத்தப்படுவதால் அந்த வீதங்களை வலய முகாமையாளர்கள் தமது வாகனத்தை பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளது. | தாபனவிதிக் கோவையின் பிரகாரம |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| i. | நிதிப்பிரமாணம் 381 | உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்காக திறைசேரியிடமிருந்து (அரச கணக்குகள் திணைக்களத்திடம்) விண்ணப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அபிவிருத்தி லொத்தர் சபையின் பெயரில் 02 அரச வங்கிகளில் மற்றும் 02 தனியார் வங்கிகளில் 11 நடைமுறைக் கணக்குகள் தொடர்பில் அவ்வாறு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அந்த நடைமுறைக் கணக்குகள் பணிப்பாயர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | அபிவிருத்தி லொத்தர் சபையானது பணிப்பாளர் சபையொன்றினால் சுயாதீனமான நிதி அமைச்சினால் நிர்வகிக்கப்படும் நிறுவனம் ஒன்னாகும். எனவே உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காக சபைக்கு வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிக்கும் தேவை ஏற்படின், அதற்காக பணிப்பளர் வரைபு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்று அந்த கணக்குகளை அரச அல்லது வணிக வங்கியொன்றில் ஆரம்பித்தல் என்பது அதுவரை பின்பற்றப்பட்ட நடைமுறை ஆகும். இந்த கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள 11 கணக்குகளும் அந்த நடைமுறைக்கமைய ஆரம்பிக்கப்பட்ட கணக்குகள் ஆகும். அவ்வாறே, மேற்குறிப்பிடப்பட்ட அ.லொ.ச. பணிப்பாளர் சபையில் நிதி அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் ஒருவரும் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உள்ளமையால் அவர் உள்ளடங்களான ஏனைய அனைத்து அங்கத்தவர்களினமுத் முன் அங்கீகாரத்துடனேயே இந்த கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | |
| (ii) | நிதிப் பிரமாணம் 395(இ) | வங்கிக் கணக்கினை உடைய அனைத்து நிறுவனங்களாலும், ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் உள்ள கொடுக்கல் வாங்கல்களின் நிலைமை தொடர்பில் அதற்கடுத்த மாதத்தின் 15ஆந் திகதிக்கு முன்னர் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் வங்கி இணக்கக்கூற்று தயாரித்தல் தொடர்பில் தாமதமொன்று நிலவுகின்றமை 3 சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டது. | தற்போது அனைத்து வங்கி இணக்கக்கூற்றுக்களும் உரிய காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்டு குறித்த மாதம் நிறைவடைந்து 10 நாட்களினுள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வங்கி இணக்கக்கூற்று தயாரித்து சமர்ப்பித்தல். |
| (iii) | நிதிப்பிரமாணம் 756 (5) (அ) | 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான சபைக்கு சொந்தமான பயன்படுத்த முடியாத ரூபா 49,495 பெறுமதியான 08 வெகுமதி மற்றும் மேம்படுத்தல் உருப்படிகளுக்குரிய 80 பொருட்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அந்த உருப்படிகள் பொது 47 மாதிரியில் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். இந்த இனங்காணப்பட்ட பயன்படுத்த முடியாத உருப்படிகளை பதிவு செய்வதற்காக தற்போது உரிய புத்தகங்கள் மற்றும் பொது 47 மாதிரிப் படிவத்தின பிரகாரம் அறிக்கையிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல். |
| (ஈ) | 2018 நவம்பர் 14ஆந் திகதிய 02/2018ஆம் இலக்க பொது | அரச வங்கிகளுக்கு புறம்பாக 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா | மாவட்ட விற்பனை முகவர்களின் நாளாந்த வைப்புக்களை இலகுபடுத்தும் | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | முயற்சிகள் சுற்றறிக்கையின் (2) ஆம் பிரிவு | 5,486,920 ஆன பணம் சபைக்கு சொந்தமான தனியார் வங்கிக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டு, அதன் ஊடாக திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | நோக்கில் இந்த கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் வைப்புச் டிசய்யப்படும் அளவினை அவதானித்து இந்த கணக்கை தொடர்ந்தும் பேணிச் செல்லல் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும். | |
| (உ) | 1971 இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 2018 நவம்பர் 14ஆந் திகதிய 02/2018ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவு | 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 206,987,668 ஆன மீதி சேமிப்பு வங்கிக் கணக்கில் மற்றும் ரூபா 62,184,487 ஆன தொகை ஏழு நாள் ஏக்ஷன வைப்புக் கணக்கில் முதலீடு செய்வதற்காக அமைச்சரினால் வழங்கப்பட்ட அங்கீகாரம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் நடைமுறையே பின்பற்றப்படுகின்றது. அதற்கு உரிய அங்கீகாரம் ஏற்கனவே பெறப்பட்டுள்ளதுடன், கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளவாறு எதிர்காலத்தில்நிதி அமைச்சிற்கு சமர்ப்பித்து அதன் அங்கீகாரத்தினையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். | உரிய முறையில் அங்கீகாரம் பெற்று முதலீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் 2008 திசெம்பர் 31ஆந் திகதிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 142 இன் 5.2 III பிரிவு | சபையினால் 144 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 250,000 இனை விஞ்சி ரூபா 10,011,540 ஆன தொகை இடர் கடனாக செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | அபிவிருத்தி லொத்தர் சபையின் ஆரம்பம் முதல் இதுவரையிலும் இந்த நடைமுறையின் கீழ் ஊயழிர்களை ஊக்குவிப்பதற்காக இடர் கடன் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |
| (எ) | 2003 யூன் 02ஆந் திகதிய 12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.12 ஆம் பந்தி | நிறுவனத்தினால் ஏதேனும் நலன்புரி நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்படும் எனின், அதற்காக பொது திறைசேரியின் பொது | கொரோனா வைரஸ் ஆரம்பித்த ஆரம்ப காலத்தில் 2020 மார்ச் மாதம் 18 முதல் மே மாதம் 12 வரையிலும் நாடு மூமப்ப்டிருந்த | கடன் வழங்கும் போது சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல். |

முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். எனினும், சபையினால் கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக ஏற்பட்ட பொருளாதார இடர்பாட்டினை தணிப்பதற்காக இடர் கடன் தொகைக்கு ஒத்ததாக அடிப்படை சம்பளத்திற்கு சமனான தொகையொன்றினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

காரணத்தால் சபையின் பணிகளும் அந்த காலப்பகுதியில் இடம்பெறவில்லை. அதன் கரணமாக பதவியணியினரின் வருமானம் இழக்கப்படுகின்றமையால் அவர்களின் நாளாந்த வாழ்க்கை பாதிப்படைந்துள்ளதாகவும், அதனால் கடன் முற்பணமொன்றை வழங்குமாறு பதவியணியின் அங்கத்தவர்கள் கோரிக்கை விடுத்த போதிலும், அது நிராகரிக்கப்பட்டது. எனினும், அவர்களின் தொடர்ச்சியான வேண்டுகோள் மற்றும் அவர்களின் பாரிய எதிர்ப்புக்கு மத்தியில் அவர்கள் கோரிய முற்பணத் தொகையை விட குறைவான அடிப்படை சம்பளத்திற்கு சமனான தொகையொன்றை வழங்குவதற்கு நேர்ந்தது. தற்போது அவ்வாறு வழங்கிய தொகை அறவிடப்பட்டுள்ளது. இதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த முற்பணத் தொகையை வழங்குவதற்காக நிதி அமைச்சின் அல்லது பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. எனினும், எதிர்காலத்தில் இவ்வாறான முற்பணம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழங்குவதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | 2003 யூன் 02ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பந்தி | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன், நாளதுவரையாக்கப்பட்ட பாதீட்டின் பிரதியொன்று அதற்கடுத்த நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது 2020 யூலை 16ஆந் திகதியே சபையினால் பாதீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். 2019ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் மற்றும் சபையின் பணிப்பாளர் சபை நியமிக்கப்படாமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டுக்காக பாதீட்டினை அங்கீகரிப்பதில் தாமதம் ஏற்பட்டது. எவ்வாறான போதிலும், 2021ஆம் ஆண்டின் பாதீடு 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 12 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் |
| (ஐ) | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் தலைமைக் கணக்காளரின் 2017 ஒக்தோபர் 03ஆந் திகதிய MF/06/20/Common/2017 ஆம் இலக்க கடிதம் | பெறுகைகள் திட்டத்திற்கு புறம்பாக ஏதேனும் கொள்வனவொன்று மேற்கொள்ளப்படும் எனின் அதற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும், அது தொடர்பில் சிறப்பாக நியாயப்படுத்த வேண்டு எனவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சபையின் 2020ஆம் ஆண்டுக்கான பெறுகைகள் திட்டத்திற்கு புறம்பாக ரூபா 15.4 மில்லியன் பெறுமதியான பெறுகைகள் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. | பெறுகைகள் திட்டத்ினுள் உள்ளடக்கப்பட்டிராத அந்த கொள்வனவுகள் தொடர்பில் பெறுகைகள் திட்டத்தினை திருத்துவதற்காக 2020 திசெம்பர் மாதம் பணிப்பாளர் சபை பத்திரமொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன், அது 2021.01.27 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | முன் அங்கீகாரம் பெற்று பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 3,018,654,911 ஆன இலாபமொன்றானதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 2,668,792,667 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 349,862,244 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கு வருமான வரி, உள்ளபடியான கொடுப்பனவுகள் மற்றும் செலவினம் குறைவடைந்தமை பிரதானமாக காரணமாக அமைந்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான மீளாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்கள் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது லொத்தர் சீட்டுக்களின் விற்பனை வருமானம் ரூபா 2,032,384,652 இனால் அல்லது 12 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சபையின் ஏனைய வருமானங்கள் ரூபா 35,496,364 இனால் அல்லது 18 சதவீதத்தினால் விழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) கடந்த வருடத்திற்கு ஒப்பாக நடப்பாண்டின் வெகுமதி செலவினம் ரூபா 1,200,979,164 இனால் அல்லது 13 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. 2020 ஆம் ஆண்டின் சீட்டிழுப்புச் செலவினம் ரூபா 74,091,096 இனால் அல்து 13 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(உ) கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது பகிர்ந்தளிப்புக் கிரயம் ரூபா 861,770,154 இனால் அல்லது 20 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அந்த குறைவிற்கு விற்பனையுடன் சார்ந்த கிரயம் ரூபா 37,786,734 இனால் அல்லது 86 சதவீதத்தினால் ஆன குறைவடைந்தமை, விளம்பரக் கிரயம் ரூபா 202,715,432 இனால் அல்லது 62 சதவீதத்தால் குறைவடைந்தமை மற்றும் பகிர்ந்தளிப்புக் கிரயம் ரூபா 266,152,929 இனால் அல்லது 63 சதவீதத்தினால் குறைவடைந்தமையும் தாக்கமளித்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்தில் சபையில் செயற்பாடு, இலாபத்தன்மை, திரவத்தன்மை ஆகியவற்றை காண்பிக்கும் விகிதங்கள் தொடர்பான பகுப்பாய்வொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| | **2020** | **2019** |
|---|---|---|
| **செயற்பாடுகள்** | சதவீதம் | சதவீதம் |
| விற்பனை வருமானத்திற்கு விற்பனை மற்றும் விநியோகச் செலவினம் | 22 | 25 |
| விற்பனை வருமானத்திற்கு விற்பனைக் கிரயம் | 58 | 58 |
| **இலாபத்தன்மை விகிதம்** | | |
| மொத்த இலாப விகிதம் | 42 | 42 |

| | | |
|---|---|---|
| தேறிய இலாப விகிதம் | 20 | 16 |
| விற்பனை மற்றும் விநியோக செலவினம் மொத்த நிர்வாக செலவினத்தின் சதவீதமாக | 87 | 89 |
| தேறிய இலாபத்தில் வெகுமதிகளை ஒப்படைக்கும் சதவீதம் | 11 | 13 |
| தேறிய இலாபத்திற்கு வருமான வரி விகிதம் | 0.4 | 9 |
| **<u>திரவத்தன்மை விகிதங்கள்</u>** | | |
| நடைமுறை விகிதம் | 1:1.66 | 1:1.63 |
| விரைவு விகிதம் | 1:1.64 | 1:1.60 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடந்த வருடத்தில் மற்றும் மீளாய்வாண்டின் போது சபையினால் மேற்கொள்ளப்பட்ட விற்பனை மற்றும் விநியோகச் செலவினம், விற்பனை விலையில் 25 சதவீதம் முதல் 22 சதவீதம் வரை குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையினால் மீளாய்வாண்டின் போது ஈட்டப்பட்டுள்ள தேறிய இலாபத்தில் 11 சதவீதம் நுகர்வோருக்கு வழங்க வேண்டிய பரிசுகளை மீள பெற்றுக் கொண்டமை மூலம் கிடைத்த அளவினையே பிரதிநிதித்துவப்படுத்தியது. இந்த சதவீதம் கடந்த வருடத்தில் 13 சதவீதமாக காணப்பட்டதுடன் தேறிய வருமானத்திற்கு வருமான வரி விகிதம் 09 சதவீதம் முதல் 0.4 சதவீதம் வரையான குறைந்த பெறுமதியினை கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் லொத்தர் சீட்டு விற்பனை வருமானம் ரூபா 2,032,384,652 அல்லது 12 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தமைக்கு ஒப்பாக விற்பனைக் கிரயம் ரூபா 1,283,859,397 இனால் அல்லது 13 சதவீதத்தினால் குறைவடைந்தமை தேறிய இலாப விகிதம் 42 சதவீதத்தினால் ஒத்த மட்டத்தில் நிலவியமை தொடர்பில் தாக்கம் செலுத்தியிருந்தது.

(ஈ) கடந்த வருடம் மற்றும் மீளாய்வாண்டின் போது நடைமுறை விகிதம் முறையே 1.63 மற்றும் 1.66 ஆன பெறுமதியினை கொண்டிருந்தது. அதன் பிரகாரம் சபையின் நடைமுறை சொத்துக்கள் விகிதம் உயர்வான மட்டத்தில் காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் போதும் செயற்படு மூலதன முகாமைத்துவம் தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் குழுவினால் 2008 ஏப்ரல் 18ஆந் திகதி ரூபா 8,095,000 பெறுமதியான டபள் கெப் வண்டியொன்றினை | ரூபா 16,842,554 ஆன கெப் வண்டியின் மொத்தக் கிரயத்தினை வாகனத்தை எடுத்துச் சென்ற | வாகனம் கிடைக்காதாயின் உரிய பணத்தை அறவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | தனியார் நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன், அந்த வாகனம் நிறுவனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. பின்னர் அந்த நிறுவனத்தால் வாகனத்திற்கான கொடுப்பனவை மேற்கொள்ளுமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை சபையினால் நிராகரிக்கப்பட்டமையால், 2009 ஆம் ஆண்டின் போது சபைக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது. அந்த வழக்கின் தீர்ப்பு தனியார் நிறுவனத்திற்கு சார்பாக காணப்பட்டது. அதற்காக சபையினால் ரூபா 16,842,554 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. | தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு உரிய பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | முறையான திட்டமொன்று இல்லாது மேம்படுத்தல் உருப்படிகளை கொள்வனவு செய்தமை காரணமாக ரூபா 3,623,367 பெறுமதியான மேம்படுத்தல் பொருட்கள் குடைகள் (ஆண்கள்), ரீ-சேட்கள், சோலார் விளக்குகள், கெப், போசிலேன் பொருட்கள், நீர் வடிகள் ஆகியன களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. சபையின் மேம்படுத்தல் பொருட்களின் மீள் கட்டளையிடும் இருப்பின் அளவு தொடர்பில் போதியளவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பின்பற்றப்படுவதாக அவதானிக்கப்படவில்லை. | இந்த இருப்பில் பெரும்பாலானவை நிலவும் கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக மீள் கட்டளையிடப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், அவற்றை பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், விற்பனை முகவர் கூட்டங்கள் ஆகியன இரத்துச் செய்யப்பட்ட காரணத்தால் அவை களஞ்சியத்தில் எஞ்சியுள்ளன. | பெறுகை உருப்படிகள் கொள்வனவு செய்யப்பட்ட வருடத்திலேயே திட்டமிட்டவாறு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | 2019 ஒக்தோர்பர் 24ஆந் திகதி லொத்தர் சீட்டுகளின் பரிசுக் கோலம் தொடர்பில் கலந்துயாடுவதற்காக | இந்த இரு துவிச்சக்கர வண்டிகளை எதிர்வரும் உடனடி லொத்தர் சீட்டுக்களில் | எதிர்வரும் உடனடி லொத்தர் சீட்டுக்களுக்காக பரிசாக உள்ளடக்குவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | நடாத்தப்பட்ட கூட்டத்தில், களஞ்சியத்தில் காணப்படும் வெற்றிக்கான உரித்து கோரப்படாத 06 மாத காலத்தினை கடந்த வெகுமதிகளை எதிர்வரும் போட்டிகளுக்கு பயன்படுத்துவதற்கு சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2018ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 529,850 பெறுமதியான 02 சைக்கிள்கள் 2019 திசெம்பர் மாதம் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட உடனடி லொத்தர் சீட்டின் பரிசாக மற்றும் 2020 பெப்ரவரி லக்ன வாசனா விசேட சீட்டிழுப்பின் போது பரிசாக வழங்குவதற்கும் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) இற்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த 02 துவிச்சக்கர வண்டிகளும் கணக்காய்வுத் திகதியான 2021 பெப்ரவரி 12ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் காணப்படுவதாக பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், கடந்த காலப்பகுதியில் நாட்டில் நிலவிய Covid தொற்றுநோய் நிலைமை காரணமாக உடனடி லொத்தர் சீட்டுகளின் விற்பனை மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. இந்த லொத்தர் சீட்டுகளை எதிர்காலத்தில் சந்தைக்கு விநியோகிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஈ) | ரூபா 592,500 பெறுமதியான 123 பரிசுச் சீட்டுகள் 12 வருட காலத்தினுள் சபையினால் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. அவற்றுள் ரூபா 7,500 பெறுமதியான 07 பரிசில் சீட்டுக்கள் 2019 ஆகஸ்ட் 31ஆந் திகதி காலாவதியாகியிருந்தன. மேலும், ரூபா 585,000 பெறுமதியான ரூபா 5,000 பெறுமதியுடைய 117 பரிசுச் சீட்டுகள் காணப்பட்டதுடன், அந்த சீட்டுகளின் காலாவதித் | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியுடைய பரிசுச் சீட்டுகளை நாளதுவரையாக்குவதற்காக வர்த்தக அமைச்சின் செயலாளரின் தலைமையின் கீழ் சதொச நிறுவனத்துடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் போது சதொச நிறுவனத்திடம் குறித்த தகவல்கள் இல்லாதிருந்தமையால் அதற்குரிய அனைத்து | சபைக்கு அதனை பெற்றுக்கொள்கின்றேன். |

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவை 2009 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட பரிசுச் சீட்டுகளாவதுடன், தற்போது கொள்வனவு செய்யப்பட்டு 12 வருடங்கள் கடந்துள்ளமையால் எதிர்வரும் பரிசு வழங்கல்களின் போது இந்த சீட்டுகளை பயன்படுத்துவதற்கு உள்ள இயலுமை தொடர்பில் நிச்சயமற்ற நிலையொன்று காணப்படுகின்மை அவதானிக்கப்பட்டது. | தகவல்களும் அபிவிருத்தி லொத்தர் சபையினால் வழங்கப்பட்டது. அதன் பிரகாரம், வர்த்தக அமைச்சினால் சதொச நிறுவனத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது அந்த பணம் அபிவிருத்தி லொத்தர் சபைக்கு மீண்டும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆகும். எதிர்காலத்தில் அது சபைக்கு கிடைக்கவுள்ளது. | |
| (உ) | நடைமுறை வேலைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ள சாப்பாட்டு அறை (Lunch Room) மற்றும் களஞ்சிய அறை (Stores Room) ஆகியவற்றுக்காக முறையே ரூபா 1,336,676 மற்றும் ரூபா 246,918 எனுமாறு ரூபா 1,583,594 ஆன தொகை 2018 ஆம் ஆண்டளவில் செலவிடப்பட்டிருந்தது. இதற்காக 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளுக்காக எதுவித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிராததுடன், பணி நிறைவடைந்துள்ளதெனின் குறித்த சொத்துக்களின் கிரயம் கணக்கு வைக்கப்பட்டு பெறுமானத்தேய்விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உணவு அறை மற்றும் களஞ்சிய அறையை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,583,594 ஆன தொகை தொகை செலவிடப்பட்டுள்ளதுடன், அந்த பணிகள் இது வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நடைமுறை வேலைக் கணக்கில் அந்த பணம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்த பணிகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் சொத்தொன்றாக இனங்காணப்பட்டு பெறுமானத்தேய்விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பணிகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் சொத்தொன்றாக இனங்காண நடவடிக்கை எடுத்தல். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெகுமதிப் பொருட்களினுள் கொள்வனவு செய்யப்பட்டு 02 வருடங்களை விஞ்சிய ரூபா 548,224 பெறுமதியான 08 கைத்தொலைபேசிகள் மற்றும் 04 மடி கணினிகள் | இந்த உருப்படிகளை முறையான கைத்தவிர்ப்பு நடைமுறையின் கீழ் கைத்தவிர்ப்பதற்க உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு | அங்கீகாரத்துடன் கைத்தவிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல். |

| | | | |
|---|---|---|---|
| | ஆகியவற்றின் உத்தரவாதக் காலம் நிறைவடைந்திருந்ததுடன், ரூபா 32,510 பெறுமதியான 02 மவுன்டன் சைக்கிள்கள் மற்றும் பலகையினால் ஆன தொலைக்காட்சிப்பெட்டி தாங்கியொன்று பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத மட்டத்தில் காணப்படுவதாக பௌதீக பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது. அவற்றுள் 03 கைத்தொலைபேசிகள், 04 மடி கணினிகள் மற்றும் 02 மவுன்டன் சைக்கிள்கள் 2019 ஆம் ஆண்டின் போது பொருள் மெய்மையாய்வின் ஊடாக விற்பனை செய்வததற்காக இனங்காணப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2021 பெப்ரவரி 12ஆந் திகதி வரையிலும் அந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | உள்ளன. | |
| (ஆ) | சபையின் மொத்த எஞ்சும் லொத்தர் சீட்டுக்களின் சதவீதம் 2016, 2017, 2018, 2019 மற்றும் 2020ஆம் ஆண்டின் சனவரி முதல் யூலை வரையிலும் முறையே 0.2, 24.01, 10.41, 7.57, மற்றும் 14.1 ஆகும். இதன் மூலம் விற்பனை செய்யாது எஞ்சும் லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கை கடந்த காலங்களில் அதிகரித்துள்ளமையை இது காண்பிக்கின்றது. 2020ஆம் ஆண்டின் முதல் 7 மாத காலப்பகுதியினுள் எஞ்சிய லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டுச் செலவினம் ரூபா 181 இலட்சமாக | 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளுக்கு ஒப்பாக 2020ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மிகவும் குறைவான மீள அனுப்புதல் வீதம் பதிவு செய்யப்பட்டதுடன், அந்த சதவீதம் சனவரியில் 7 சதவீதம், பெப்ரவரி மாதம் 4 சதவீதமாகவும் பதிவாகியது. எனினும், அதன் பின்னர் கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக மிகவும் உயர்ந்த அளவான மீள திருப்பி அனுப்புதல் வீதம் பதிவு செய்யப்பட்டமையால் அந்த வருடத்தில் | எஞ்சும் லொத்தர் சீட்டுக்களின் சதவீதத்தினை குறைவான மட்டத்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டது. | உயர்வான மீள அனுப்புதல் வீதம் பதிவாகியது. | |
| (இ) | 2016ஆம் ஆண்டுக்கு முன்னர் களஞ்சியத்தில் காணப்பட்ட பயன்படுத்தப்படாத, எனினும் பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத நிறையில் காணப்பட்ட ரூபா 505,407 பெறுமதியான 10 விளம்பர உருப்படிகளுக்குரிய 119 பொருட்கள் ஏலமிடுவதற்கு கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 325,569 பெறுமதியான 07 உருப்படிகளுக்குரிய 76 பொருட்களை ஏலமிடப்பட்டு 2020ஆம் ஆண்டின் போது ரூபா 38,954 தொகை ஈட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத விளம்பரப் பொருட்கள் என்பதால் ரூபா 286,615 ஆன நட்டமொன்று, அதாவது 88 சதவீதமான நட்டம் சபைக்கு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பொதுவாக கைத்தவிர்ப்பு செயன்முறையில் ஈடுபடுத்தப்படுவது பாவனையிலிருந்து அகற்றப்பட்ட மற்றும் காலவதியான பொருட்களே ஆகும். அதன் காரணமாக அந்த உருப்படிகளை கொள்வனவு செய்த பெறுமதிக்கு விற்பனை செய்வதற்கான இயலுமை காணப்படவில்லை. அதன் காரணமாக அந்த பொருட்களை கைத்தவிர்த்தமையால் இலாபத்தினை பெற்றுக்கொள்ள முடியாது என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம். | விளம்பர உருப்படிகளை கொள்வனவு செய்த வருடத்திலேயே அவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது களஞ்சியத்தில் எஞ்சியிருந்த 5,938,989 லொத்தர் சீட்டுக்கள் மற்றும் விற்பனை செய்யாது எஞ்சியிருந்த 83,323,876 லொத்தர் சீட்டுக்கள் ஆகியவற்றுக்காக ரூபா 41,122,828 ஆன அச்சீட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2020 மார்ச் மாதம் முதல் இடம்பெற்ற நாட்டின் எதிர்பாராத கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக நாடு அவ்வப்போது மூடி வைக்கப்பட்டிருந்தமையால் பொரும் அளவிலான இருப்பு எஞ்சியிருந்தது. இதன் பிரகாரம் அந்த வருடத்தை விட மிகவும் சிறந்த முறையில் முகங்கொடுப்பதற்காக மிகவும் திட்டவட்டமான முறையில் கட்டளையிடல் பணிகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. | திட்டமிட்ட முறையில் கட்டளையிடல் பணிகளை மேற்கொள்ளல். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.6ஆம் பந்தி மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 7/98, 8/98(I) மற்றும் 8/98 (II) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதவியணியின் செயல்திறனை மதிப்பீடு செய்தல் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், சபையினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணியின் செயல்திறனை மதிப்பீடு செய்வதற்காக உரிய நடைமுறையொன்றினை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் KPI (அடிப்படை குறிகாட்டிகள்) தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம், 2022ஆம் ஆண்டு முதல் இதனை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல். |
| (ஆ) | 2018 திசெம்பர் மாதம் முதல் செயலிழந்து காணப்படும் 2695680 ஆம் இலக்கமுடைய இலங்கை வங்கியின் சத்தின ஏக்ஷன வங்கிக் கணக்கினை மூடுவதற்கு அல்லது பொருத்தமான மாற்று வழிமுறையொன்றினை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது செயலிழந்து காணப்படும் 2695680 ஆம் இலக்கமுடைய சத்தின ஏக்ஷன வங்கிக் கணக்கினை எதிர்காலத்தில் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூடுவதற்கு அல்லது பொருத்தமான மாற்று வழிமுறையொன்றினை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (இ) | அபிவிருத்தி லொத்தர் சபைக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போக்குவரத்துத் திணைக்களத்தில் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் ஆகியவற்றை ஒன்றுக்கொன்று ஒப்பீடு செய்யும் போது வாகனங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போக்குவரத்துத் திணைக்களத்தில் சபையின் | அபிவிருத்தி லொத்தர் சபைக்கு சொந்தமான வாகனங்கள் அந்தந்த காலப்பகுதியினுள் முறையான கேள்வி நடைமுறையின் கீழ் விலைக்கேள்வி கோரப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன், அவற்றின் உரித்தும் கொள்வனவாளருக்கு உரிய முறையில் மாற்றப்பட்டுள்ளது. எனினும், கொள்வனவு செய்த தரப்பினரால் | சபையின் பெயரில் உள்ள பௌதீக ரீதியில் காணப்படடாத வாகனங்களை மோட்டார் வாகனங்கள் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு அறிவித்து, அந்த கட்டமைப்பிலிருந்து அகற்றுதல். |

| | | | |
|---|---|---|---|
| | பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 37 வாகனங்கள், சபையின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லைல என்பது அவதானிக்கப்பட்டது. | வாகனங்களை அவர்களின் பெயரில் மீள பதிவு செய்வதற்காக மோட்டார் வாகனத் திணைக்களத்திற்கு அனுப்பியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்படுகின்றது. இது அபிவிருத்தி லொத்தர் சபையின் கட்டுப்பாட்டினை எஞ்சிய விடயமாகும். எவ்வாறான போதிலும், எதிர்காலத்தில் மோட்டார் வாகனங்களை கைத்தவிர்ப்பு செய்யும் போது கொள்வனவாளரினால் அவரின் பெயரில் பதிவ செய்த பின்னர் சபையிலிருந்து அந்த வாகனத்தை கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்படும். | |
| (ஈ) | அபிவிருத்தி லொத்தர் சபையின் ஆரம்பம் முதல் நிர்வாக மற்றும் மேவுகை பணிகள் தொடர்பில் செயல்வழிக் கோவையொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், அந்த பணிக்காக 2016 ஆம் ஆண்டின் போது தகைமைவாய்ந்த நபரொருவர் நிமிக்கப்பட்டிருந்தார். உரிய தரப்பினரால் நிலவும் சட்டங்கள் மற்றும் விதிகள் ஆராயப்பட்டு குறித்த செயல்வழிக் கோவை தயாரிக்கப்பட்டு 2019 ஒக்தோபர் 14 ஆந் திகதி அபிவிருத்தி லொத்தர் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த பணிக்காக ரூபா 4,500,000 தொகையை உரிய தரப்பினருக்கு செலுத்துவதற்கு இணக்கம் | அபிவிருத்தி லொத்தர் சபைக்கு செயல்வழிக் கோவையொன்று தயாரிப்பதற்கு பொருத்தமான ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அதன் பிரகாரம் அவர் உடன்படிக்கையின் சில பகுதிகளை வரைபாக்கி சபைக்கு கையளித்துள்ளார். அவரால் வழங்கப்பட்ட அந்த பகுதிகள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் பணிப்பாளர் சபையின் அபிப்பிராயமாக கொள்ளப்பட்டது அவரால் தயாரிக்கப்பட்ட பகுதிகளின் பெரும்பாலான பகுதிகள் தாபனவிதிக் கோவை மற்றும் நிதிப் பிரமாணத்தை உள்ளடக்கியிருந்தது என்பதாகும். அதன் | சபையினால் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

காணப்பட்டிருந்ததுடன், இவற்றுள் ரூபா 1,700,000 தொகை இதுவரையிலும் செலுத்தப்பட்டிருந்தது. அவரால் குறித்த செயல்வழிக் கோவை இரு பகுதிகளாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், சபையில் தற்போது நிலவும் நடைமுறைக்கு இணங்காத வகையில் இந்த செயல்வழிக் கோவை தயாரிக்கப்பட்டுள்ளதாக காரணம் கற்பித்து எஞ்சிய பணம் செலுத்துதல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. மேலும், இந்த பணிக்காக கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த "லொத்தர்கள் மற்றும் சீட்டிழுப்பு பணிகள், உள்ளக கட்டுப்பாடு மற்றும் கணக்காய்வுப் பணிகள்" ஆகியவற்றுக்கான விதிகளை தயாரிதல் ஆகிய பணிகளை இடைநிறுத்துமாறு சபையினால் அதனை தயாரித்த தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறித்த பணி இதுவரையிலும் நிறைவு செய்யப்பட்டிராததுடன், அதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலொன்றாக அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த பணிக்காக கைச்சாத்திடப்பட்ட நிபந்தனைகள் மீறப்படல் மற்றும் செலுத்த வேண்டிய எஞ்சிய தொகை தொடர்பில் சட்டரீதியான அச்சுறுத்தலான்று நிலவுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

காரணமாக வியாபார நிறுவனமொன்றுக்கு பொருந்தும் வகையில் மீண்டும் வரைபாக்கி பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் உரிய வளப்பங்களிப்பாளருடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் சபையுடன் கலந்துரையாடி உள்ளதுடன், தற்போது மீள தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மீள தயாரிக்கப்பட்ட பகுதிகள் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டு கிடைக்கும் அறிவுரைகளுக்கமைய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3.4 தொழிற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நடமாடும் விற்பனை வாகனங்களில் லொத்தர் சீட்டு விற்பனை வருமானத்தின் 40 சதவீதம் கிரயமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் ரூபா 20 ஆன லொத்தர் சீட்டொன்றின் விற்பனைக் கிரயம் ரூபா 8 ஆகும். இவ்வாறு நடமாடும் வண்டிகளில் விற்பனை செய்யப்படும் லொத்தர் சீட்டுக்களின் இருப்பானது சபையின் சபையின் பொதுவான நடைமுறையின் ஊடாக விற்பனைப் பிரதிநிதிகளின் ஊடாக விற்பனை செய்யப்படும் எனின் ரூபா 27,629,085 ஆன மேலதிக வருமானமொன்றினை ஈட்டக்கூடியதாக இருந்தது. அதன் பிரகாரம், நடமாடும் வண்டிகளில் மேற்கொள்ளப்படும் லொத்தர் சீட்டு விற்பனைக்காக மேற்கொள்ளப்படும் கிரயத்திற்கு ஒப்பாக நலனைப் பெற்றுக்கொள்ள சபை தவறியுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இதன் போது சந்தையிலுள்ள போட்டித்தன்மை மற்றும் சீட்டிழுப்புக்க உட்படும் லொத்தர் சீட்டுக்கள் பெருமளவில் காணப்படுகின்ற காரணத்தால், நுகர்வோரு உடனடி லொத்தர் சீட்டுக்களிலிருந்து விலகி சீட்டிழுக்கும் லொத்தர் சீட்டுக்களை வாங்க முற்பட்டுள்ளனர். அதன் காரணமாக உடனடி லொத்தர் சீட்டுக்களின் விற்பனைக்காக பெரும் முயற்சி எடுக்க வேண்டியதுடன், இதற்காக எதுவித விளம்பர செலவினமும் மேற்கொள்ளப்படவில்லை.<br><br>அதன் காரணமாக உடனடி லொத்தர் சீட்டுக்களின் விற்பனையில் மேம்படுத்தல் மூலோபாயமொன்றாக மற்றும் அதிக விற்பனையை பெற்றுக்கொள்வதற்காக நடமாடும் வண்டிகள் ஈடுபடுத்தப்படுகின்றன. இதன் மூலம் கிடைக்கும் இலாபப் பங்கு குறைவடைந்த போதிலும், உடனடி லொத்தர் சீட்டுக்களின் விற்பனை மேம்படுத்தல் மூலோபாயமொன்றாக நடமாடும் வண்டிகள் ஈடுபடுத்தப்படுகின்றன. | உடனடி லொத்தர் சீட்டுக்களின் விற்பனையை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல். |

(ஆ) நாளாந்தம் சீட்டிழுக்கப்படும் லொத்தர் சீட்டுக்களில் சீட்டிழுப்பு சந்தர்ப்பத்தில் பகிர்ந்தளிக்கும் விற்பனைப் பிரதிநிதிகளுக்கு சபைக்கு வழங்கப்படாத லொத்தர் சீட்டுக்கள் காணப்பட்டமை மற்றும் உப களஞ்சியத்தினால் குறித்த பட்டியல்கள் பிரகாரம் சரியான பண்டக்குறியுடனான லொத்தர் சீட்டுக்கள் விநியோகிக்கப்படாமை போன்ற சில தவறுகளின் அடிப்படையில் பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அந்த லொத்தர் சீட்டுக்கள் குறித்த முகவரின் வற்பனையாக கருதி கணினிக் கட்டமைப்பினுள் உள்ளடக்கி சீட்டிழுக்கும் சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இதற்காக உதவிப் பொது முகாமையாளரின் (நிதி) அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. சீட்டிழுப்பின் பின்னர் அந்த லொத்தர் சீட்டுக்களின் பண்டக்குறியீட்டுக்கு உரிய பரிசில்கள் நிறுத்தப்பட்டமை, அது பின்னர் அகற்றப்பட்டமை மற்றும் பகிர்ந்தளிப்பு பிரதிநிதிகளுக்கு மீள பணத்தை செலுத்துதல் போன்ற பணிகளும் முறையான அங்கீகாரமின்றி உதவிப் பொது முகாமையாளர் (நிதி) இனால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2020ஆம் ஆண்டினுள் அவ்வாறான 13 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், அதன் விற்பனைப் பெறுமதி ரூபா 307,861 ஆகும்.

லொத்தர் சீட்டுக்களின் இருப்பு பகிர்ந்தளிக்கும் பிரதிநிதிகளுக்கு அனுப்பப்படுவது பேரூந்து மற்றும் புகையிரதம் மூலம் ஆகம். சில சந்தர்ப்பங்களில் அந்த லொத்தர் சீட்டுக்களின் இருப்பு பேரூந்து அல்லது புகையிரதத்தில் காணாமற்போகும் சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்த லொத்தர் சீட்டுக்களின் இருப்பினை குறித்த விற்பனை முகவருக்கு விற்பனை செய்ததாக கருதி, அவர்களின் பெயரில் கொடுக்கல் வாங்கல் பதிவு செய்யப்படும். பின்னர் அந்த இருப்பு பகிர்ந்தளிப்பு பிரதிநிதிகளுக்கு கிடைத்தாக அவர்களால் எழுத்து மூலம் சான்றுபடுத்தியதன் பின்னர் அந்த பணம் மீண்டும் பகிர்ந்தளிப்பு பிரதிநிதிகளின் கணக்குகளுக்கு செலவு வைக்கப்படும். எனினும், மேற்படி நடைமுறை தொடர்பில் கணக்காய்வுப் பிரிவினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டதன் பின்னர் பகிர்ந்தளிப்பு பிரதிநிதிகளுக்கு அனுப்பப்பட்ட திகதிக்கு அடுத்த தினத்தில் அந்த லொத்தர் சீட்டுக்களின் இருப்பானது தொலைந்து போயுள்ளதாக பகிர்ந்தளிப்பு பிரதிநிதிகளால் சான்றுபடுத்தியதன் பின்னர்

உரிய முறையில் லொத்தர் சீட்டுக்களை பகிர்ந்தளித்தல் நடைமுறையொன்றை உருவாக்குதல் மற்றும் விற்பனை பிரதிநிதிகளுக்கு லொத்தர் சீட்டுக்கள் கிடைத்தமையை உறுதிப்படுத்தல்.

| | | | |
|---|---|---|---|
| | | அந்த லொத்தர் சீட்டுக்களின் இருப்பினை விற்பனையாக கணக்கு வைக்கப்பட மாட்டாது. அதன் பிரகாரம் இவ்வாறான பிரச்சினையொன்று எதிர்காலத்தில் ஏற்படாது. | |
| (இ) | ஆண்டினுள் மேலதிகமாக கட்டளையிடப்பட்ட லொத்தர் சீட்டுக்களின் அளவானது 31,779,000 ஆக காணப்பட்டதுடன், களஞ்சியத்தில் விநியோகிக்கப்படாது எஞ்சியுள்ள லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கை 1,255,570 ஆகும். அது சதவீதமொன்றாக 4 சதவீதமாக காணப்பட்டதுடன், அத கோடிபதி லொத்தர் சீட்டின் மேலதிக கட்டளையிடல் உரிய முகாமைத்துவத்துடன் இடம்பெறுவதில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள 1,255,570 எஞ்சுவதற்கான காரணமாக அமைந்தது 2020ஆம் ஆண்டில் இடம்பெற்ற COVID நிலைமை காரணமாக சில பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டமை காரணமாக அந்த பிரதேசங்களின் விற்பனை முகவர்கள் லொத்தர் சீட்டுக்களை கொண்டு செல்லாத காரணத்தால் களஞ்சியத்தில் இருப்பு எஞ்சியது. | மேலதிக இருப்பு கட்டளையிடும் போது விற்பனை தொடர்பில் உறுதிப்படுத்தல். |
| (ஈ) | DLB/FIN/MStores/4-4 ஆம் இலக்க 2020 சனவரி 29ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பிரதான களஞ்சியத்தின் முகாமைத்துவ உதவியாளரால் 2019ஆம் ஆண்டு திசெம்பர் மாதமளவில் மற்றும் 2020 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தின் பல்வேறு சீட்டிழுப்புகளுக்குரிய கட்டளையிடப்படாத 281,000 லொத்தர் சீட்டுக்கள் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்ததாக உயர் முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், லொத்தர் சீட்டுகளுக்கு கட்டளை பிறப்பித்தல், கட்டளை | லொத்தர் சீட்டுகளுகளின் அச்சீட்டாளரால் சபையினால் கட்டளையிடப்பட்ட அளவ்னை விஞ்சி மேலதிக தொகையான லொத்தர் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. எனினும், அதற்காக பொருள் பெறுவனவுப் பட்டியல் (GRN) வழங்கப்படாதுள்ளதுடன், அதற்காக கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படவில்லை. | கட்டளையிடப்படாத லொத்தர் சீட்டுகள் அனுப்பப்பட்டமை தொடர்பில் அச்சீட்டாளருக்கு அறிவித்து உரிய நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | பிறப்பித்த லொத்தர் சீட்டுகளுகளை களஞ்சியத்திற்கு பொறுப்பேற்றல் மற்றும் மேலதிக கட்டளைகளின் ஊடாக லொத்தர் சீட்டுகளுகளை பெற்றுக்கொள்ளல் போன்ற நடைமுறைகள் உரிய முறையில் இடம்பெறவில்லை என்பது கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டது. மேலும், அந்த காரணத்தால் 2020ஆம் ஆண்டின் முதல் 7 மாத காலப்பகுதியினுள் மேலதிகமாக கட்டளையிடப்பட்ட லொத்தர் சீட்டுகளுகளின் எண்ணிக்கை 4 சதவீதமான அல்லது 1,255,570 எஞ்சியிருந்தது. | | |
| (உ) | 2020ஆம் ஆண்டின் மார்ச் மாதம் முதல் யூலை மாதம் வரையான காலப்பகுதியை கருத்திற்கொள்ளும் போது கொரோனா நோய் பரவியமையால் சபையின் விற்பனை வருமானம் 2019ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2020ஆம் ஆண்டின் போது ரூபா 3,124,722,840 இனால் அதாவது 45 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன். இது நாட்டின் அனைத்து விபாபாரப் பிரிவிற்கும் பொதுவான விடயமொன்றாகும். | விற்பனை வருமானத்தை அதிகரிப்பதற்கு மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தல். |
| (ஊ) | 2020 சனவரி 30ஆந் திகதிய பெறுகைகள் குழுவின் பரிந்துரைக்கமைய சுப்பர் போல் விசேட சீட்டிழுப்பிற்கான ஸ்கூட் வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட வெற்றிபெற்ற விலைக்கேள்வியாளருக்கு அந்த திகதியிலேயே பொருள் கட்டளை வழங்கப்பட்டிருந்தது. எனினும், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.7.1(ஆ) பிரிவிற்கமைய | பொதுவான கொள்வனவின் போது உள்ளாறே ஒரே தடவையில் விலைக்கேள்வியை சாட்டுதல் இதன் போது இடம்பெறாததுடன், வெற்றியாளர்கள் முன்வரும் முறைமைக்கமைய ஒவ்வொரு தடவையும் பொருள் கட்டளைகளை சமர்ப்பிப்பதன் மூலம் இந்த | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்படல். |

| | | |
|---|---|---|
| ஒப்பந்தக் கையளிப்பிற்காக உடன்படிக்கையின் செல்லுபடியாக காலப்பகுதியினுள் ஒப்பந்தக் கையளிப்பு தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டதும் கையளிப்புக் கடிதமொன்று உரிய வழங்குநருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.10 இன் பிரகாரம், செயலாற்றல் பிணைகளை சமர்ப்பிப்பதற்கு மற்றும் 8.9.1 இன் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | துவிச்சக்கரவண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. ஒரே தடவையில் துவிச்சக்கர வண்டிகளை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி வைப்பதால் ஏற்படக்கூடிய சிக்கல்களை குறைக்கும் வகையில் இதன் போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

## 3.5 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான அபிவிருத்தி லொத்தர் சபைக்கு சொந்தமான ரூபா 270,749,417 கூட்டுத்தொகையான பணம் ஆக்கபூர்வமான பணியொன்றில் ஈடுபடுத்தப்படாது 06 நடைமுறைக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இந்த பணப் பரிசில்களை செலுத்துவதற்காக சேரும் பணமாவதுடன், இந்த பணத்தை எமது நடைமுறைக் கணக்குகளில் நிறுத்தி வைக்காது ஏழு நாட்கள் ஏக்ஷன கணக்கில் நிறுத்தி வைக்கப்படும். அவ்வாறு ஏழு நாட்கள் ஏக்ஷன கணக்கில் நிறுத்தி வைக்கப்படுவதால் சபைக்கு மேலதிக வருமானமொன்று உருவாகின்றது. அவ்வாறே, இந்த பணத்தை சபையின் தேவைக்கேற்ப மற்றும் எவ்வாறான சந்தர்ப்பத்தில் எந்தளவு | நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணத்தை ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்தல். |

| | | |
|---|---|---|
| | எண்ணிக்கையான வெற்றியார்கள் முன்வருவார்கள் என்பது எமக்கு தெரியாது என்பதால் அந்த பணத்தை குறுங்கால முதலீடாகவேனும் தவறில்லாது மேற்குறிப்பிட்ட முறையில் ஏழு நாட்கள் ஏக்ஷன கணக்கில் நிறுத்தி வைக்கப்படும். | |

**3.6 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விற்பனை மேம்படுத்தல் உத்தியோகத்தர்களால் பயன்படுத்தப்பட்ட ரூபா 1,352,610.58 கிரயமான 07 துவிச்சக்கர வண்டிகள் 02 வருடங்கள் 11 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக அலுவலக வாளகத்தில் வாகனத் தரிப்பிடத்தில் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாது களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | விற்பனை மேம்படுத்தல் உத்தியோகத்தர்களால் பயன்படுத்தப்பட்ட 07 துவிச்சக்கர வண்டிகள் தலைமை அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த துவிச்சக்கர வண்டிகளை பழுதுபார்ப்பதற்கு அதிக கிரயம் ஏற்படுவதால் அதனை கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முறையான கைத்தவிர்ப்பு நடைமுறையின் ஊடாக கைத்தவிர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பயன்படுத்த முடியாததெனின் கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |

**3.7 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 5,565,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட Rear Body இல்லாத Double Wheel க்ரு கெப் வண்டி விற்பனை மேம்படுத்தல் வாகனமாக தயார்ப்படுத்துவதற்கு 2018 ஒக்தோபர் 18 ஆந் திகதி தனியார் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் 2020 திசெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள போதிலும் சபை எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை கருத்திற் கொள்ளாது அமைப்புக்குறிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த பணிக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்கான ஒரு வருட உத்தரவாதக் காலம் நிறைவடைந்திருந்தமை, சொத்துக்கள் மற்றும் அதன் உதிரிப்பாகங்களின் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தாமை மற்றும் செயலாற்றல் பிணைகளின் செல்லுபடியான காலம் கடந்திருந்தமை போன்ற விடயங்களின் அடிப்படையில் ரூபா 11,991,900 ஆன கிரயத்தினை | தற்போது இந்த விளம்பர வண்டியின் அனைத்து பணிகளும் (Modifications) நிறைவு செய்யப்பட்டு உரிய நிறுவனங்களால் சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அந்த வாகனத்திற்கு தேவையான LED திரைகளை கொள்வனவு செய்தல் மற்றும் பொருத்துதல் ஆகியன ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப அறிவுரைகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்க இந்த வாகனத்தை ஈடுபடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த செயற்பாட்டு சிக்கல் உருவாகியுள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | சபையின் பிரதான பணியொன்றான லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டுப் பணிகள் 2017ஆம் ஆண்டு முதல் முறையான பெறுகைகள் திட்டமொன்றின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிராததுடன், நிலவும் உடன்படிக்கை காலம் நிறைவடையும் தருவாயில் பெறுகை நடைமுறை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பொதுவாக சுமார் 06 மாத காலமாக பெறுகை நடைமுறை இடம்பெறுவதுடன், அதன் காரணமாக உடன்படிக்கை காலத்தினையும் 06 முதல் 08 மாதங்கள் வரையான காலம் நீடிப்பு செய்யப்பட்டிருந்தது. 2017 ஆகஸ்ட் 01ஆந் திகதி முதல் இதுவரையிலும் இரு அச்சீட்டு நிறுவனங்கள் மாத்திரம் அதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தன. | 2020/21 ஆம் ஆண்டுக்குரிய லொத்தர் சீட்டுக்களை அச்சிடும் பெறுகை நடவடிக்கைகள் 2020 மார்ச் 15ஆந் திகதி ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அந்த பணிகள் 2020 யூன் 01ஆந் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.<br><br>நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் 2020 மார்ச் 16ஆந் திகதி முதல் 2020 மே 11ஆந் திகதி வரையிலும் நாடு மூடப்பட்டிருந்ததுடன், அலுவலகப் பணிகள் 2020 மே 11ஆந் திகதி மீள ஆரம்பிக்கப்பட்டது. இந்த பெறுகை நடவடிக்கைகள் 2020 யூன் 01ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த பணிகள் ஆரம்பிக்கக்கூடிய ஆகக் கிட்டிய திகதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | லொத்தர் சீட்டுக்களின் பெறுகை நடவடிக்கைகள் பெறுகைகள் வழிகாட்டிக்கமைய நிறைவேற்றுதல். |
| (இ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.14 ஆம் பந்திக்கமைய பெறுகையின் ஒட்டுமொத்த பெறுமதி ரூபா 250 மில்லியனை விஞ்சும் போது அது அமைச்சரவைப் பெறுகைகள் குழு அல்லது அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைகள் குழுவினால் மேற்கொள்ளப்பட | சபையினால் சீட்டிழுப்புக்காக 07 லொத்தர் சீட்டுக்கள் அச்சிடுவதற்காக ஒரு வகையான லொத்தர் சீட்டினை அச்சிட்டு வழங்குவதற்கு வழங்குநர் ஒருவரை தெரிவு செய்தல் பெறுகையொன்றாக கருத்திற்கொள்ளப்பட்டு, இதற்காக விலைக்கேள்வி கோரப்பட்டுள்ளதுடன், இதன் போது ஒரு லொத்தர் சீட்டுக்குரிய விலைக்கேள்விகள் தனித்தனியாக மதிப்பீட்டுக்கு | -மேற்படி- |

வேண்டுமெனினும், சபையினால் அது தொடர்பில் எதுவித கவனமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. 2020/2021 ஆம் ஆண்டுக்காக மதிப்பிடப்பட்ட அச்சீட்டு செலவினம் ரூபா 422 மில்லியனான போதிலும், அது 7 லொத்தர் சீட்டுகளுக்கான 7 பெறுகைகளாக குறிப்பிட்டு அதனை திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிதி எல்லையின் கீழ் மேற்கொள்ள முடியும் என அறிக்கையிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் திணைக்கள பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் மூலம் இந்த பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என உதவி பொது முகாமையாளர் (பெறுகைகள்) இனால் 2020 மே 29ஆந் திகதி பரிந்துரை செய்யப்பட்டு அதற்காக தலைவர் மற்றும் பொது முகாமையாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், இந்த பணிகள் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையிலிருந்து விலகி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்பது அவதானிக்கப்பட்டது.

உள்ளாக்கப்படுகின்றன. அனைத்து லொத்தர் சீட்டுக்களையும் வழங்குவதற்கு உரியதாக ஒரு பெறுகையாக விலைக்கேள்வி கோரல் மூலம் அனைத்து லொத்தர் சீட்டுகளுக்காக ஒரு வழங்குநர் தெரிவு செய்யப்பட்டால் அதன் மூலம் சபை பாரிய அளவிலான அச்சீட்டு அபாயத்திற்கு முகங்கொடுக்க நேரிடும். ஏதேனும் வழங்குநரின் இயந்திரக் கோளாறு அல்லது அவரின் தரப்பிலிருந்து மீறிய நிலைமையொன்றினுள் லொத்தர் சீட்டுக்களை விநியோகிப்பதற்காக தாக்கம் செலுத்தக்கூடிய விடயங்களை கருத்திற்கொண்டு இடம்பெறக்கூடிய அச்சுறுத்தலான நிலைமை இதன்போது முதன்மையான கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் மூலம் பல வழங்குநர்களை தெரிவ செய்வதன் மூலம் சபையின் அச்சீட்டு அபாயம் குறைவடைவதுடன், அதன் காரணமாக ஒரு லொத்தர் சீட்டுக்கு ஒரு வழங்குநர் எனும் வகையில் 7 வகையான லொத்தர் சீட்டுகளுக்கு தனித்தனியாக விலைக்கேள்வி கோரப்பட்டுள்ளது. இதற்கு முன்னைய பல ஆண்டுகளாக அமைச்சின் பெறுகைகள் குழுவினால் அவ்வாறே விலைக்கேள்வி கோரப்பட்டு அச்சீட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த முறையில் இந்த வருடத்திலும் அந்த பெறுகை நடவடிக்கைகள் பெறுகைகள் குழுக்களின் அதிகார எல்லையினுள் அவ்வாறே ஆரம்பிக்கப்பட்டன. விசடமாக இதற்கு முன்னைய

| | | | |
|---|---|---|---|
| | | வருடங்களிலும் அமைச்சரவை பெறுகைகள் குழு அவ்வாறே செயற்பட்டிருந்ததுடன், அதனைப் பின்பற்றி இந்த வருடமும் அவ்வாறே பணிகள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>அவ்வாறே இறுதியாக நிலவிய லொத்தர் சீட்டுக்களின் தேவைப்பாட்டுக்கமைய மதிப்பிடப்பட்ட கிரயம் அமைச்சரவை பெறுகைகள் குழுவின் எல்லையை விஞ்சுகின்றமையால் அந்த பெறுகை நடவடிக்கைகள் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைகள் குழுவின் மூலம் மேற்கொள்ளல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | |
| (ஈ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.9.5, 7.9.6 ஆம் பிரிவுகளில் மற்றும் 2013/01 மற்றும் 2017/04 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் தேசிய உரித்து எனும் பங்கு உரித்தில் 51 சதவீதத்தினை விஞ்சுதல் என வரைவிலக்கணம் தரப்பட்டுள்ள போது அதனை விஞ்சி வழங்குநருக்கு 100 சதவீதமும் உள்நாட்டு உரித்துடன் காணப்பட வேண்டும் எனும் நிபந்தனை 2020ஆம் ஆண்டின் போது விலைக்கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த நிபந்தனைகளை உள்ளடக்குவதற்கு 2008 இன் 08/2356/306/145/TBR ஆம் இலக்க | அந்த அமைச்சரவைத் தீர்மானம் 2017ஆம் ஆண்டு முதல் கவனத்திற்கொள்ளப்பட்டு ள்ளது. அதற்கு காரணமாக அமைந்துள்ளதாவது 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட பெறுகைகளின் போது சில வெளிநாட்டுக் கம்பனிகள் இணைப்பு முயற்சிகளாக விலைக்கேள்வி சமர்ப்பித்து லொத்தர் சீட்க்களை அச்சிடுவதற்காக தொடர்புபட்டு பின்னர் பங்குடமை எனும் பெயரில் பேணப்பட்டு, வெள்நாட்டுக் கம்பனிகள் மாத்திரம் அனைத்து அச்சீட்டு பணிகளையும் மேவுகைப்படுத்தல் மற்றும் BOI வசதியின் அடிப்படையில் மூலப்பொருட்களை இறக்குமதி செய்தல் மூலம் பொருத்தமற்ற முறையில் கிரய நலனை பெற்றுக்கொள்ள முயற்சி | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சரவைத் தீர்மானத்தை அடிப்படையாக கொள்ளப்பட்டதாக பொது முகாமையாளரால் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், 2009 ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரையிலும் பெறுகை ஆவணங்களை தயாரிக்கும் போது இந்த நிபந்தனை உள்ளடக்கப்படாமைக்கான காரணங்கள் விளக்கப்பட்டிருக்கவில்லை . | செய்துள்ளமை அவதானிக்கப்பட்டது. அந்த நிலைமையின் அடிப்படையில் இணைப்பு வியாபாரங்கள் பெயரளவில் செயற்படுகின்றமையால் வெளிநாட்டு வழங்குனரால் முழுமையான நடைமுறையையும் மேற்கொள்வதன் மூலம் இந்த நாட்டிலிருந்து வெளியே இடம்பெறும் பணப் பரிமாற்றங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு அமைச்சரவை பெறுகைகள் குழுவினால் அதற்காக பொருத்தமான நிபந்தனைகளை உள்ளடக்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.<br><br>அதன் பிரகாரம், இது தொடர்பில் சட்டரீதியான அறிவுரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு விலைக்கேள்வியாளர் 100 சதவீத உரித்து காணப்பட வேண்டும் எனும் நிபந்தனை விலைக்கேள்வி ஆவணப்படுத்தப்பட்டது. அந்த திகதி முதல் அந்த விலைக்கேள்வி நிபந்தனைகள் வேறுபாடின்றி காணப்பட்டது. | |
| (உ) | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 5.3.2 ஆம் பிரிவின் பிரகாரம் விலைக்கேள்வியாளர் ஆவதற்கான நேரடியாக தாக்கம் செலுத்தும் ஏதேனும் விடயமொன்று காணப்படும் போது அது கேள்வி கோரலின் போது நேரடியாக தாக்கம் செலுத்தும் விடயம் எனின் அதனை விலைக்கேள்வி ஆவணங்களிலும் உள்ளடக்க வேண்டிய போதிலும் அவ்வாறு அல்லாது 2020 ஆம் ஆண்டின் | விலைக்கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் மதிப்பீட்டு பணிகள் இடம்பெறுவதுடன் விலைக்கேள்வி நிபந்தனைகளுக்கு இனங்காத வகையில் விலைக்கேள்வி பத்திரங்கள் நிராகரிக்கப்படலும் இடம்பெறும். அவ்வாறே சபையின் கடந்த வருடங்களில் வழங்குநர்களின் செயலாற்றலினை மதிப்பீடு செய்யும் போது கருத்திற்கொள்ளப்படுமென | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | விலைக்கேள்வி மதிப்பீடு நிராகரிக்கப்பட்டிருந்தது. | விலைக்கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கு காரணமாக அமைவது நம்பகத்தன்மையை இழந்த வழங்குனர் ஒருவருக்கு விலைக்கேள்விளை கையளிப்பதன் மூலம் ஏற்பட்ட நம்பிக்கை இன்மை தொடர்ந்தும் சபையின் தரப்பினருக்கு உள்ள அச்சுறுத்தல் காரணமாக ஆகும். அதனால் விலைக்கேள்வியை சமர்ப்பித்துள்ள விலைக்கேள்வியாளர்களின் மும்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கப்படல் அதன் பிரகாரம் இடம்பெற்றுள்ளது என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கின்றோம். | |
| (ஊ) | சபையினால் ரூபா 3,275,246 செலவினம் மேற்கொள்ளப்பட்டு Sweep App ஊடாக லொத்தர் சீட்டுக்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் Oracle நிறுவனத்தினால் அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் அந்த வசதியின் ஊடாக வழங்குவதற் இணங்கி இருக்கவில்லை. மேலும் மேலதிக அச்சீட்டு இயந்திரங்கள் எவையும் இல்லாதிருந்தமையை போன்று அச்சீட்டு வழுக்கலுடன் தொடர்ச்சியாக லொத்தர் சீட்டுக்கள் அச்சிடப்பட்டிருந்தமை போன்ற குறைபாடுகள் | Sweep App ஊடாக லொத்தர் சீட்டுக்களை விநியோகிக்கும் போது அதற்காக பெற்றுக்கொள்ளப்படும் லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கை திட்டவட்டமாக குறிப்பிடப்படாமல் மற்றும் அந்த இ-லொத்தர் சீட்டுக்களுக்காக மேலதிக காப்பீடொன்று பெற்றுக்கொள்ள வேண்டியமையால் அந்த காப்புறுதி கிரயம் உயர்வான பெறுமதியினை கொண்டிருந்தமையின் அடிப்படையில் Oracle International நிறுவனத்தினால் அந்த ஈ லொத்தர் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.<br>எவ்வாறான போதிலும் Oracle கம்பனி தற்போது சபையின் லொத்தர் சீட்டு விநியோகத்தராக உள்ளமை | அச்சீட்டாளரின் குறைபாடுகள் நிலவுகின்றமையால் போட்டி அடிப்படையிலான விலைக்கேள்வி கோரப்பட்டு சிறந்த அச்சீட்டாளரை தெரிவு செய்தல். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படும் போதிலும் அந்த நிறுவனம் தகைமை பெற்ற நிறுவனமொன்றாக ஏற்றுக்கொள்ளல் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக காணப்பட்டது. | மற்றும் Oracle கம்பனி வெற்றிகரமான வழங்குநராக குறிப்பிட முடியாத அளவிற்கு வழங்கலில் நளிவுகள் இல்லாதிருந்தமையால் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் Oracle கம்பனி வெற்றிகரமான வழங்கநராக இனங்காணப்பட்டுள்ளது. | |
| (எ) | பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் 2017ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையிலும் லொத்தர் சீட்டுகளை அச்சிடும் போது சபைக்கு செலவிட நேர்ந்த மொத்த மிகைச் செலவினம் ரூபா 72,479,000 ஆகும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ஏதேனும் பெறுகைக்கான பரிந்துரைகளை முன்வைத்தல் பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்படும். அதன்னால் அந்த குழுக்களின் பரிந்துரைகளுக்கமைய விலைக்கேள்வி கையளிப்பு இடம்பெறுகின்றமையால் கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளவாறு மேலதிக கிரயமொன்றை மேற்கொள்ள நேரவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளை சரியாக பெற்றுக்கொள்ளல். |
| (ஏ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8(ஆ) பந்திக்கமைய விடயம் தொடர்பில் போதிய அறிவுடைய ஆகக் குறைந்தது ஒரு அங்கத்தரேனும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவில் உள்ளடங்கியிருக்க வேண்டிய போதிலும், சுப்பர் போல், ஷனிதா வாசனா விசேட சீட்டிழுப்பு ஆகியவற்றுக்காக கார் மற்றும் ஸ்கூட்டர்களை கொள்வனவு செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த சிறிய பெறுகைகள் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்காக வாகன விடயம் தொடடர்பான விசேட | லொத்தர் வெற்றிகளுக்குரிய பரிசுகளுக்காக மோட்டார் வாகனங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் குறித்த முகவர் நிறுவனங்களின் ஊடாக Brand New வாகனங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்படுகின்றன. பரிசுகளுக்காக பொருட்களை கொள்வனவு செய்தல் பொதுவான கொள்வனவிலிருந்து வேறுபட்டதாகும் என்பதுடன், ஏதேனும் பரிசுக்குரியதாக சபையினால் அந்த பரிசுக்காக ஒதுக்கப்படும் உச்ச தொகைக்கு உரிய நலன் வெற்றியாளருக்கு கிடைக்கும் வகையில் அந்த வாகனங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. அதன் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்படல். |

| | | | |
|---|---|---|---|
| | அறிவுடைய நபரொருவர் உள்ளடங்கியிருக்கவில்லை. | போது தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பில் உரிய ஒத்துழைப்பினை பெறுகைகள் வழிகாட்டியின் 7.3.1 இன் பிரகாரம் நிறுவனத்தின் போக்குவரத்து உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றது. அதனால் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் விடயம் தொடர்பான விசேட நிபுணர் ஒருவர் இல்லாதிருந்த போதிலும், நிபுணர்களின் அறிவுரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு மதிப்பீட்டு நடைமுறைகள் இடம்பெற்றுள்ளன. | |
| (ஐ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.3 (அ) பிரிவின் பிரகாரம் விலைக்கேள்வி திறக்கும் மாதிரிக்கமைய இரு அங்கத்தவர்களால் விலைக்கேள்வி திறக்கப்பட்டிருந்த போதிலும், இந்த குழுவிற்காக பெறுகைகள் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதாக போதிய தகவல்கள் கணக்காய்வுக் கோவையில் காணப்படவில்லை. | விலைக்கேள்வி திறக்கும் குழு பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்துடடன் நியமிப்பதற்கு உரிய பணிகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்படல். |
| (ஒ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தம் கையளிப்பதற்கு முன்னர் பெறுகைகள் குழுவினால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மேற்படி 3 பெறுகைகள் | சபையின் பெறுகை நடவடிக்கைகளின் போது அந்த குழுவின் தீர்மானததை அவ்வாறே நடைமுறைப்படுத்தல் பொதுவான நடைமுறை ஆகம். எனினும், தற்போது திணைக்கள பெறுகைகள் குழுவின் தீர்மானங்கள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மற்றும் உப பெறுகைகள் குழுவின் தீர்மானங்கள் தலைவரின் அங்கீகாரத்தின் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்படல். |

| | | |
|---|---|---|
| பரிந்துரைகளுக்கும் தலைவரின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடிப்படையில் நடைமுறைப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |

## 3.8 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 342 ஆக காணப்பட்டதுடடன், உள்ளபடியான பதவியணி 316 ஆகும். அதன் பிரகாரம், 39 வெற்றிடங்கள் நிலவுவதாக அவதானிக்கப்பட்டது. | 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான சபையின் முழுமையாக 39 வெற்றிடங்கள் நிலவின. அவற்றுள் சில பதவிகள் நீண்ட கால தேவை இல்லை என தீர்மானிக்கப்பட்டு கீழிறக்குவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன் காரணமாக அது தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதம் மூலம் அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. எனினும், இதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே, சில பதவிகளுக்காக (உதவிப் பொது முகாமையாளர் விற்பனை, தரக் கட்டுப்பாட்டு உதவியாளர் மற்றும் துறை சந்தைப்படுத்துநர்) ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பம் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதற்கான ஆட்சேர்ப்புகளும் எதிர்காலத்தில் இடம்பெறும். அதன் பிரகாரம் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் குறைவடையும். | சேவையின் தேவைப்பாட்டுக்கமைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

## 4. கணக்களிதகைமை மற்றும் நல்லாளுகை

### 4.1 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டறிக்கை உரிய திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்திற்க சமர்ப்பிக்க வேண்டியமை. |

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதியொன்று அதற்கடுத்த நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 தினங்களுக்கு முன்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் சபையினால் அது 2020 ஆம் ஆண்டின் பெப்ரவரி 19 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

### 4.3 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட 5 தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட 5 தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல். |